Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2022 Date: 13.11.2025
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | பவித்ரா | Village | சின்னமனூர் |
| Father/ Husband Name | நாட்ராயன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 28/2025 | Calling | --- |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 13.11.2025 TIME 04.15 **PM**

1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1–வது எதிரி எனது கணவர். 2–வது எதிரி எனது மாமியார். எனக்கும், 1–வது எதிரிக்கும் 21.08.2020–ம் தேதி தென்பழனி முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எனது உறவினர்கள் மட்டும் இருந்தார்கள். 1–வது எதிரியின் பெற்றோர், சகோதரி திருமணத்தில் பங்கு பெறவில்லை. அவர்கள் விருப்பமின்றி அவர் திருமணம் செய்ததால் அவர்கள் வரவில்லை. திருமணத்திற்கு பின்பு கொரான நோய் தொற்று காலம் என்பதால் நானும், 1–வது எதிரியும் எனது பெற்றோர் வீட்டில் சுமார் 1 1/2 மாதம் இருந்தோம். 1–வது எதிரி என்னை அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து செல்வது குறித்து 2–வது எதிரியிடம் கேட்டதற்கு, 2–வது எதிரி ரூ.3 லட்சம் பணம் கொடுத்தால் தான் வீட்டிற்கு வரமுடியும் என்று கூறியதாக 1–வது எதிரி என்னிடம் கூறினார்.

2) எனது பெற்றோர் மேற்படி ரூ.3 லட்சம் பணத்தை எனது கணவரிடம் கொடுத்தார்கள். சுமார் 1 வாரம் கழித்து 1–வது எதிரியின் வீட்டிற்கு செல்வது குறித்து கேட்ட போது, வீட்டிற்குள் வரக்கூடாது என 2–வது எதிரி கூறிவிட்டார். 1–வது எதிரி அந்தமானில் இந்திய கப்பல் படையில் பல்மருத்துவ பிரிவில் வேலை பார்த்து வந்தார். எனது கணவர் வேலை செய்யும் அந்தமானுக்கு நானும், எனது கணவரும் செல்ல வேண்டும் என்றால் எனது மாமியாருக்கு ரூ.2,75,000/– கொடுக்க வேண்டும் என கூறியதன் பெயரில் மேற்படி பணத்தை எனது பெற்றோர் கொடுத்து, அதன் பின்னர் 30.09.2020–ம் தேதி நானும், 1–வது எதிரியும் அவர் வேலை செய்யும் அந்தமானுக்கு சென்றோம். மேலும் அந்தமான் செல்வதற்கான டிக்கெட், இதர செலவுகளுக்காக மேலும் ரூ.1 லட்சம் எனது பெற்றோரிடம் இருந்து வாங்கி சென்றோம். அந்தமான் சென்றவுடன் ஒருமாதம் கழித்து நான் கர்ப்பமாக இருந்தேன். எனவே 1–வது எதிரி எனது அம்மாவை எனக்கு உதவியாக இருப்பதற்கு அந்தமானுக்கு அழைத்தார். கடந்த 2020–ம் வருடம் டிசம்பர் மாதம் என்னையும், எனது அம்மாவையும், 1–வது எதிரி ஊருக்கு போகுமாறு அனுப்பி வைத்தார். ஜனவரி 15–ம் தேதி வந்து அழைத்து செல்வதாக

கூறினார். அதன் பின்னர் எனது கணவர் என்னிடம் பேசவில்லை. எனது கணவரை நான் தொடர்பு கொண்ட போது அவர் போனை எடுக்கவில்லை. அந்தமானில் நாங்கள் குடியிருந்த வீட்டின் உரிமையாளரிடம் போன் செய்து கேட்ட போது மேற்படி வீட்டை எனது கணவர் காலி செய்துவிட்டதாக கூறினார்கள். நான் பல இடங்களில் புகார் அளித்தும் எனது கணவர் எனக்கு தொடர்பு கொள்ளவில்லை.

3) 23.06.2021–ம் தேதி நான் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஜீலை 1–ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த தகவல் தெரிவித்தும் எதிரிகள் வந்து பார்க்கவில்லை. எனது கணவர் கேஜி பட்டியில் இருந்தும் எனது குழந்தையை பார்க்கவில்லை. தற்போது வரை நானும், எனது குழந்தையும் எனது பெற்றோர் பராமரிப்பில் தான் இருந்து வருகிறோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2022 Date: 13.11.2025
Deposition of witness for prosecution: PW2 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணன் | Village | சின்னமனூர் |
| Father/ Husband Name | காமாட்சி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 56/2025 | Calling | கமிஷன் கடையில் வேலை பார்க்கிறேன். |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 13.11.2025 TIME 04.15 **PM**

1-வது எதிரி ஆஜர். 2-வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

1) அ.சா.1 எனது மகள். 1-வது எதிரி எனது மகளின் கணவர். 2-வது எதிரி எனது மகளின் மாமியார். எனது மகளுக்கும், 1-வது எதிரிக்கும் 21.08.2020-ம் தேதி தென்பழனி முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எனது மகளுக்கு 25 சவரன் தங்க நகைகள், 1-வது எதிரிக்கு 5 சவரன் தங்க நகைகளும், பணம் ரூ.3 லட்சம் கொடுத்தோம். 10 நாட்கள் கழித்து 1-வது எதிரி, அசா.1 ஐ அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து செல்வது குறித்து 2-வது எதிரியிடம் கேட்டதற்கு, 2-வது எதிரி ரூ.3 லட்சம் பணம் கொடுத்தால் தான் வீட்டிற்கு வரமுடியும் என்று கூறியதாக 1-வது எதிரி என்னிடம் கூறினார். அதன் பெயரில் என்னை, 1-வது எதிரி கேஜி பட்டிக்கு அழைத்துச்சென்று ஊருக்கு வெளியே என்னை விட்டுவிட்டு என்னிடம் இருந்து ரூ.3 லட்சத்தை வாங்கிக்கொண்டு சென்றார்.

2) 1-வது எதிரி அந்தமானில் இந்திய கப்பல் படையில் பல்மருத்துவ பிரிவில் வேலை பார்த்து வந்தார். 1-வது எதிரி வேலை செய்யும் அந்தமானுக்கு அவரும், அசா.1-ம் செல்ல வேண்டும் என்றால் 2-வது எதிரிக்கு ரூ.2,75,000/- கொடுக்க வேண்டும் என கூறியதன் பெயரில் மேற்படி பணத்தை நாங்கள் கொடுத்து, அதன் பின்னர் 30.09.2020-ம் தேதி அசா.1 ம், 1-வது எதிரியும் அவர் வேலை செய்யும் அந்தமானுக்கு சென்றார்கள். மேலும் அந்தமான் செல்வதற்கான டிக்கெட், இதர செலவுகளுக்காக மேலும் ரூ.1 லட்சம் நாங்கள் கொடுத்தோம். அந்தமான் சென்றவுடன் ஒருமாதம் கழித்து அ.சா.1 கர்ப்பமாக இருப்பதாக சொல்லி. 1-வது எதிரி எனது மனைவியை அ.சா.1 க்கு உதவியாக இருப்பதற்கு அந்தமானுக்கு அழைத்தார். சிறிது நாட்கள் கழித்து அ.சா.1 யும் எனது மனைவையும், 1-வது எதிரி ஊருக்கு போகுமாறு அனுப்பி வைத்தார். ஜனவரி 15-ம் தேதி வந்து அழைத்து செல்வதாக கூறினார். அதன் பின்னர் 1-வது எதிரி அ.சா.1 டிடம் பேசவில்லை. 1-வது எதிரியை அ.சா.1 தொடர்பு கொண்ட போது

அவர் போனை எடுக்கவில்லை. அந்தமானில் அவர்கள் குடியிருந்த வீட்டின் உரிமையாளரிடம் போன் செய்து கேட்ட போது மேற்படி வீட்டை 1–வது எதிரி காலி செய்துவிட்டதாக கூறினார்கள்.

3) அதன் பின்னர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். தற்போது வரை அ.சா.1–ம் அவரது குழந்தையும் எங்களது பராமரிப்பில் தான் இருந்து வருகிறார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2022 Date: 13.11.2025
Deposition of witness for prosecution: PW3 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | தனலட்சுமி | Village | சின்னமனூர் |
| Father/ Husband Name | சரவணன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 48/2025 | Calling | -- |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 13.11.2025 TIME 04.45 **PM**

1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) அ.சா.1 எனது மகள். அ.சா.2 எனது கணவர். 1–வது எதிரி எனது மகளின் கணவர். 2–வது எதிரி எனது மகளின் மாமியார். எனது மகளுக்கும், 1–வது எதிரிக்கும் 21.08.2020–ம் தேதி தென்பழனி முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எனது மகளுக்கு 25 சவரன் தங்க நகைகள், 1–வது எதிரிக்கு 5 சவரன் தங்க நகைகளும் கொடுத்தோம். 10 நாட்கள் கழித்து 1–வது எதிரி, அசா.1 ஐ அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து செல்வது குறித்து 2–வது எதிரியிடம் கேட்டதற்கு, 2–வது எதிரி ரூ.3 லட்சம் பணம் கொடுத்தால் தான் வீட்டிற்கு வரமுடியும் என்று கூறியதாக 1–வது எதிரி என்னிடம் கூறினார். அதன் பெயரில் நாங்கள் 1–வது எதிரிக்கு கொடுத்தோம். அவர் ரூ.3 லட்சத்தை வாங்கிக்கொண்டு சென்றார்.

2) 1–வது எதிரி அந்தமானில் இந்திய கப்பல் படையில் பல்மருத்துவ பிரிவில் வேலை பார்த்து வந்தார். 1–வது எதிரி வேலை செய்யும் அந்தமானுக்கு அவரும், அசா.1–ம் செல்ல வேண்டும் என்றால் 2–வது எதிரிக்கு ரூ.2,75,000/– கொடுக்க வேண்டும் என கூறியதன் பெயரில் மேற்படி பணத்தை நாங்கள் கொடுத்து, அதன் பின்னர் 30.09.2020–ம் தேதி அசா.1 ம், 1–வது எதிரியும் அவர் வேலை செய்யும் அந்தமானுக்கு சென்றார்கள். மேலும் அந்தமான் செல்வதற்கான டிக்கெட், இதர செலவுகளுக்காக மேலும் ரூ.1 லட்சம் நாங்கள் கொடுத்தோம். அந்தமான் சென்றவுடன் ஒருமாதம் கழித்து அ.சா.1 கர்ப்பமாக இருப்பதாக சொல்லி. 1–வது எதிரி என்னை, அ.சா.1 க்கு உதவியாக இருப்பதற்கு அந்தமானுக்கு அழைத்தார். அதற்கு முன்பு அந்தமானில் இருந்த 1–வது எதிரிக்கு இருசக்கர வாகனமும் வேண்டும் என கேட்டதற் பெயரில் இருசக்கர வாகனத்தை நாங்கள் அனுப்பி வைத்தோம். அந்தமானில் நானும், அவர்களுடன் இருந்த போது 1–வது எதிரி, தனது அக்காவுக்கு இடம் வாங்குவதற்கு பணம் வேண்டும் என்றும் அதனை கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் எதுவும் இல்லை என கூறிவிட்டேன். உடனே அ.சா.1 யும், என்னையும், 1–வது எதிரி

ஊருக்கு போகுமாறு அனுப்பி வைத்தார். ஜனவரி 15–ம் தேதி வந்து அழைத்து செல்வதாக கூறினார். அதன் பின்னர் 1–வது எதிரி அ.சா.1 டிடம் பேசவில்லை. 1–வது எதிரியை அ.சா.1 தொடர்பு கொண்ட போது அவர் போனை எடுக்கவில்லை. அந்தமானில் அவர்கள் குடியிருந்த வீட்டின் உரிமையாளரிடம் போன் செய்து கேட்ட போது மேற்படி வீட்டை 1–வது எதிரி காலி செய்துவிட்டதாக கூறினார்கள். அதன் பின்னர் ஏப்ரல் மாதம் ஒரு நாள் 1–வது எதிரியிடம், நான் போன் செய்து எனது மகளை அழைத்து செல்லுமாறு கேட்டதற்கு 1–வது எதிரி மீண்டும் வீடு பிடித்து, பொருட்கள் புதியதாக மீண்டும் வாங்கி கொடுத்தால் அழைத்து செல்கிறேன் என கூறினார். ஆனால், அதன் பின்னர் நாங்கள் அழைத்த போது அவர் எங்களிடம் பேசவில்லை.

3) அதன் பின்னர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். தற்போது வரை அ.சா.1–ம் அவரது குழந்தையும் எங்களது பராமரிப்பில் தான் இருந்து வருகிறார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.